TNKK180015232019

Presented on : 17-04-2007
Registered on : 17-04-2007
Decided on : 30-03-2026
Duration : 18 years, 11 months, 13 days

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரணியல்

முன்னிலை : திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L., LLM.,D.JJJ.Psy.,

நீதித்துறை நடுவர். இரணியல்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் நாள் திங்கள்கிழமை

ஆண்டுப்பட்டியல் வழக்கு எண். 44/2007

CASE SUMMARY

Sl.No.	Description	Remarks		
1	The period of remand of the accused	Accused not Remanded		
2	The date of filing of complaint/final report in the Court	13.04.2007		
3	The date of committal of the case to the Court of Sessions	N.A		
4	The date of Questioning of accused u/s 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be	07.09.2007		
5	Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code.	U/s. 70(2) Cr.P.C Petition allowed on 17.03.2011		
6	Date of examination in Chief and Cross-examination of a witness	Witness	Chief Examination	Cross Examination
		P.W.1	06.11.2013 06.02.2019	05.08.2021
		P.W.2	06.02.2019	05.08.2021
		P.W.3	06.02.2019	22.12.2021
		P.W.4	22.12.2021	22.12.2021
		P.W.5	08.11.2023	--
		P.W.6	07.02.2024	07.02.2024
		P.W.7	09.10.2024	09.10.2024 29.01.2025
		P.W.8	20.08.2025	06.11.2025
7	Date of examination of the accused under section 313 of the Court	29.08.2025		

SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.30 18:45:05 +0530

8	Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be	A1 absconded on 16.03.2011 and surrendered on 17.03.2011 A1 absconded on 10.08.2016 and surrendered on 10.07.2017
9	Grant of stay by superior Courts and the results thereof	N.A

அரசுக்காக, காவல் ஆய்வாளர், அனைத்து மகளிர் காவல் நிலையம், குற்ற எண்.2/2007	.....குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

சுதர் (வயது 37/2007) த/பெ.தங்கநாடார் மிடாலக்காடு, பாலப்பள்ளம்	..... 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்
தங்கநாடார் (வயது 68/2007) த/பெ. நல்லதம்பி மிடாலக்காடு, பாலப்பள்ளம்	..... 2ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் (வழக்கு விசாரணையின் போது இறந்துவிட்டார்)
தங்கம்மாள் (வயது 65/2007) க/பெ. தங்கநாடார் மிடாலக்காடு, பாலப்பள்ளம்	..... 3ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் (வழக்கு விசாரணையின் போது இறந்துவிட்டார்)
சுபின் (வயது 33/2007) த/பெ. தங்கநாடார் மிடாலக்காடு, பாலப்பள்ளம்	..... 4ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்

இவ்வழக்கு **17.04.2007**அன்று நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இவ்வழக்கு **11.03.2026** இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வரப்பெற்று அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1அவர்களும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. A.பால்ராஜ்** அவர்கள் ஆஜராகியும், வாதத்தை கேட்டும் ஆவணங்களை ஆராய்ந்தும் இன்று **30.03.2026** ஆம் தேதி நீதிமன்றம் **கு.வி.மு.ச 1973 அத்தியாயம் XXVIIன்** கீழ் பிறப்பிக்கும்.....

தீர்ப்புரை

இத்தீர்ப்புரையில் இந்திய தண்டனைச்சட்டம் 1860 என்பது இ.த.ச 1860 என்றும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் 1973 என்பது கு.வி.மு.ச 1973 என்றும் பதிவிடப்படுகின்றது.

SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.30 18:45:14 +0530

1. <u>அரசுத்தரப்பு வழக்குரையின் சுருக்கம் :-</u>

கடந்த 20.11.1999 ஆம் தேதி கொல்லங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து புகார்தாரர் பத்மாவிற்கும், 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான சுதர் என்பவருக்கும் கொல்லங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து பதிவு திருமணம் செய்து 8 ஆண்டுகளாக கணவன் மனைவியாக வாழ்ந்து வந்ததாகவும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் புகார்தாரரை பார்த்து உன் அப்பன் வீட்டிலிருந்து எந்த பணம் வரதட்சணையாக கொண்டு வந்தாய் என்று கேட்டு கொடுமைபடுத்தியதாகவும், 12.12.2006 ஆம் தேதி மதியம் 02.00 மணிக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் புகார்தாரரிடம் ரூபாய் 50,000/–ம் வரதட்சணையாக கேட்டு கொடுமைபடுத்தி 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் புகார்தாரரின் வலது கையில் அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியதாகவும், 4ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் புகார்தாரரை பார்த்து உன்னையும், உனது குடும்பத்தையும் கொன்று விடுவதாக மிரட்டியதாக ஒரு தகவல் **கு.வி.மு.ச 1973 பிரிவு 154(1)ன் கீழ்** பெறப்பட்டு அதன் அடிப்படையில் புலன் விசாரணை முடிக்கப்பட்டு **1 முதல் 3 வரையிலான** குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் செய்கையானது **இந்திய தண்டனை சட்டம் 1860 பிரிவுகள் 498A, 325 மற்றும் பிரிவு 4 வரதட்சணை தடுப்பு சட்டம் 1961ன்** கீழும், **4ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரின் செய்கையானது **இந்திய தண்டனை சட்டம் 1860 பிரிவு 506 பத்தி ஒன்றின்** கீழும், தண்டிக்கத்தக்கவர்கள் என்று **குவிமுச 1973 பிரிவு 173(2)**– ன்படி குற்றமுறையீட்டாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(2ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான தங்கநாடார், 3ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான தங்கம்மாள் ஆகியோர்கள் வழக்கு விசாரணையின் போது இறந்துவிட்டதால் அவர்கள் மீதான வழக்கு அற்றுபோய்விட்டதாக உத்தரவிடப்பட்டுள்ளது)

<u>2. கு.வி.மு.ச 1973 பிரிவு 207ன் கீழ் நகல் வழங்குதல் :-</u>

இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குற்றமுறையீட்டு காவல் நிலையத்தார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் **கு.வி.மு.ச 1973 பிரிவு 207ன்** கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

<u>3. கு.வி.மு.ச 1973பிரிவு 240(1) ன்கீழ் குற்றச்சாட்டு வனைதல் :-</u>

வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதின் அடிப்படையில் இவ்வழக்கின்

SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.30 18:45:22 +0530

குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது குற்றம் புரியப்பட்டிருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு ஆதாரம் இருந்ததால் **கு.வி.மு.ச 1973பிரிவு 240(1)** ன்கீழ் **1ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவுகள் **498A, 325 மற்றும் பிரிவுகள் 4 வரதட்சணை தடுப்பு சட்டம் 1961ன்** படியும், **2,3ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீது இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவு **498A மற்றும் பிரிவுகள் 4 வரதட்சணை தடுப்பு சட்டம் 1961ன்** படியும், **4ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவு **506 பத்தி ஒன்றின்** படியும், தனித்தனியே குற்றச்சாட்டு வனையப்பட்டது.

வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை **கு.வி.மு.ச 1973பிரிவு 240(2)**ன் படி தமிழில் எடுத்துக்கூறி விளக்கி வினவப்பட்டது. இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை எனக்கூறி குற்றச்சாட்டுகளை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினர்கள். எனவே அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு **கு.வி.மு.ச 1973 பிரிவு 242** ன் கீழ் உத்தரவிடப்பட்டது.

4. கு.வி.மு.ச 1973 பிரிவு 242ன் கீழ் அரசுத்தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்:-

அரசுத்தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.8** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான** சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டன.

5. கு.வி.மு.ச 1973பிரிவு 313 (1)(b)ன் கீழ் வினவுதல் :-

அரசுத்தரப்பில் சாட்சியம் அளித்துள்ள சாட்சிகளின் சாட்சியத்தினை தொகுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகள் குறித்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களிடம் **கு.வி.மு.ச 1973பிரிவு 313 (1)(b)**ன் கீழ் வினவ குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது என்றும், பொய் வழக்கு என்றும் பதில் அளித்தார்கள்.

6. கு.வி.மு.ச 1973 பிரிவு 243ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் :-

குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தங்களது தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் இல்லை என்று கூறியதால் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.30 18:45:58 +0530

பின்னர் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அதன் அடிப்படையில் .....

7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயங்கள்

(i) இவ்வழக்கில் **1ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீதான இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவுகள் **498A, 325 மற்றும் பிரிவு 4 வரதட்சணை தடுப்பு சட்டம் 1961ன்** கீழான குற்றச்சாட்டுகளும், **4ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீதான இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவு **506 பத்தி ஒன்றின்** கீழான குற்றச்சாட்டுகளும், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

(ii) நிரூபிக்கப்பட்டிருப்பின் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனைகள் யாவை?

பிரச்சனைக்கான தீர்வுகள்

சாட்சியங்களில்.....

புகார்தாரரும் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 பத்மா தனது சாட்சியத்தில் தனக்கு ஏற்பட்ட குடும்ப வன்முறைகள் குறித்தும், கூடுதல் வரதட்சணை கேட்டது சம்மந்தமாக சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.2 ரெத்தினசாமி, அ.சா.3 ஜெயசேகர், அ.சா.4 சதாரன் ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் சம்பவம் கேள்விபட்டது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்கள்.

பார்வை மகஜர் சாட்சியான அ.சா.5 வின்சென்ட் தனது சாட்சியத்தில் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.6 வசந்தகுமாரி மருத்துவர் தனது சாட்சியத்தில் அ.சா.1க்கு சிகிச்சை அளித்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.7 கிளமன்சியாள் தனது சாட்சியத்தில் முதல் தகவல் அளிக்கை பதிவு செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

புலனாய்வு

அ.சா.8 திருமதி. தனலெட்சுமி ஆய்வாளர் – புலனாய்வு அதிகாரிக்காக சாட்சியம் அளித்ததில் இருந்து மேற்படி புலனாய்வு அதிகாரி வழக்கை கோப்புக்கு எடுத்துக்கொண்டு புலனாய்வு செய்து இறுதி அறிக்கையை காலதாமதமில்லாமல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். நீதிமன்றம் புலனாய்வை பொறுத்தவரை புலனாய்வு அதிகாரி விசாரணையை சரியான கோணத்தில் விசாரணை செய்தாரா?

SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.30 18:46:12 +0530

என்பதை பார்க்கும்போது **அ.சா.1** முதல் **அ.சா.7** வரையான சாட்சியங்களில் **கு.வி.மு.ச 1973 பிரிவு 154(1)ன்** கீழ் முறையாக ஒரு புகார்மனு பெறப்பட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதனை தொடர்ந்து **கு.வி.மு.ச 1973 அத்தியாயம் XII** ன் கீழ் முறையாக விசாரணை செய்து அதன் அடிப்படையில் ஆவணங்கள் மற்றும் அறிக்கையை சமர்பித்ததில் இருந்து, இந்நீதிமன்றம் மேற்படி புலன் விசாரணை அதிகாரி இந்த வழக்கினை சரியான கோணத்தில்தான் செய்துள்ளார் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

இந்த வழக்கில் எடுத்தியம்பப்பட்ட சாட்சிய சான்றாவணங்களின் மீதான ஆய்வு:-

ஒரு வழக்கின் துவக்கப்புள்ளி என்பது ஒரு சம்பவத்தினால் ஒரு நபர் பாதிப்படைந்து அந்த பாதிப்பின் வெளிப்பாடாக ஒரு புகார் தகவலாக பெறப்பட்டு அந்த தகவலானது வாக்குமூலமாக பெறப்பட்டு அதனை தொடர்ந்து மேற்படி சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள், கேள்விப்பட்ட சாட்சிகள், சந்தர்ப்ப சூழ்நிலைகள் மற்றும் இதர சங்கதிகளை கொண்டே எழுகிறது.

இந்த வழக்கை பொறுத்தவரை மற்ற குற்ற வழக்குகளை போல் சாட்சிய பரிசீலனை செய்துவிட இயலாது என்பதையும், இவ்வழக்கு சங்கதிகளை பொறுத்து கணவன் மனைவிக்கு இடையே நான்கு சுவற்றிற்குள் நடக்கும் செயல்களும், இரு குடும்பத்தாருக்கு இடையே நடக்கும் செயல்களுக்கும் தரப்பினர்களை தவிர்த்து பெரிய அளவில் கண்ணுற்ற சாட்சிகள் இருக்க மாட்டார்கள் என்பதும், அதன் அடிப்படையில் இவ்வழக்கில் வன்முறை மற்றும் கூடுதல் **வரதட்சணை, குற்றமுறு நம்பிக்கை மோசடியை பொறுத்து அ.சா.1 பத்மா** நட்சத்திர சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

எந்த ஒரு வழக்கிலும் சாட்சிய பரிசீலனை என்பது அவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது. ஒரு ஆவணத்தை பொறுத்து பரிசீலனை செய்ய வேண்டுமெனில் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். குறியீடு செய்வது என்பது வேறு, நிரூபணம் செய்வது என்பது வேறு என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

எந்தவொரு வழக்கிலும் சிறு சிறு முரண்பாடுகள் இருக்கத்தான் செய்யும். முரண்பாடுகளே இல்லாத சாட்சியத்தை அனுகுவது ஆபத்தானது என்பதையும், மேற்படி முரண்பாடுகள் என்பதை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை **இந்திய சாட்சிய சட்டம்**

SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.30 18:46:23 +0530

1872 பிரிவு 145ல் கூறியுள்ள வழிமுறைகளையும், **கு.வி.மு.ச 1973 பிரிவு 311ஐ** எவ்வாறு அனுக வேண்டும் என்று, **மாண்புமிகு உச்சநீதிமன்றம் விநோத்குமார் வழக்கில்** எடுத்துக் கூறியுள்ள வழிகாட்டுதல்களையும், இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

ஒரு சம்பவம் நடந்த உடன் மேற்படி சம்பவத்தின் சங்கதிகளானது, சம்பவத்தில் ஈடுபட்ட சம்பவத்தில் பாதிப்படைந்த, சம்பவத்தில் உடனிருந்த, நபர்களால் மட்டுமே தெளிவாக சொல்ல இயலும் என்பதையும், ஒரு சாட்சியம் அளிக்கும் நபரின் ஞாபகதிறன் என்பது அவரின் கற்றல், நினைவு திறன், படிப்புநிலை, சமுதாய நிலை ஆகியவையும், முக்கிய காரணிகளாக தீர்மானம் செய்யும் என்பதையும் நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

இந்த வழக்கை பொறுத்தவரை சட்டப்பிரிவுகளான

இதச 1860 பிரவு 498A –ஐ பொறுத்து :-

முதலாவதாக:- இந்த வழக்கின் 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் **அ.சா.1 பத்மாவை** கொடுமை செய்தாரா?

இதச 1860 பிரிவு 325–ஐ பொறுத்து

இரண்டாவதாக:- 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அ.சா.1 பத்மாவை கம்பால் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தினாரா?

இதச 1860 பிரிவு 325–ஐ பொறுத்து

இரண்டாவதாக:– 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அ.சா.1 பத்மாவை கம்பால் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தினாரா?

இதச 1860 பிரிவு 506 பத்தி ஒன்றை பொறுத்து

மூன்றாவதாக – 4ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் அ.சா.1யை குற்றுமுறு அச்சுறுத்தல் செய்து அதனால் அவருக்கு உடனடியான உயிர் பயம் ஏற்பட்டதா?

பிரிவு 4 வரதட்சணை தடுப்பு சட்டம் 1961ஐ பொறுத்து :-

நான்காவதாக:- 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அ.சா.1பத்மாவின் வீட்டாரிடமிருந்து வரதட்சணை கேட்டார்களா?

போன்ற கூறுகளை ஆய்வு செய்தால் மட்டுமே இந்த வழக்கிற்கான பொருண்மைக்கு தீர்வு காண இயலும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.30 18:46:44 +0530

ஆய்வும் அதற்கான காரணமும்

மேற்சொன்ன 4 வினாக்களுக்கான ஆய்வும் அதற்கான காரணமும்

அரசுத்தரப்பு முதலில் புகார் அளித்தவரின் புகாரினை மெய்ப்பிக்கவேண்டும் பின்னர் இந்த வழக்கை பொறுத்தவரை அது தொடர்பான ஆவணங்களை இந்நீதிமன்றத்தின் முன் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யவேண்டும் என்பது சட்டத்தின் நிலைப்பாடாகும். இந்த வழக்கிலும் மேற்காணும் சங்கதிகள் தொடர்பான ஆவணங்களை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு **இந்திய சாட்சியச்சட்டம் 1872 பிரிவு 101 மற்றும் பிரிவு 3ன் கீழ்** அரசுத்தரப்பையே முழுவதுமாக சார்ந்துள்ளது.

முதல் தகவல் அறிக்கையில் :-

குற்றச்சம்பவம் குறித்த தகவலை பொறுத்து சங்கதிகளை முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3ஆக அ.சா.7ன்** மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. குற்றம் நடந்ததாக கூறப்படும் தேதி **12.12.2006 ஆம் தேதிக்கு முன்பும், 12.12.2006 ஆம் தேதி 14.00 மணி** என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது **15.01.2007ஆம் தேதி நேரம் 20.30 மணி** ஆகும்.

மற்ற காயம்பட்ட வழக்குகளை போல் குடும்ப வன்முறை மீதான வழக்குகளில் உடனடியாக தரப்பினர்கள் யாரும் சமுதாய சூழ்நிலையில் புகார் கொடுப்பது இல்லை என்பதாலும், அவ்வாறே கொடுத்தாலும், நிலைய பொறுப்பு அதிகாரிகள் குடும்பத்தின் நலன்கருதி உரிய விசாரணை செய்து தரப்பினர்களுக்கு இடையே பேச்சுவார்த்தை நடத்தி அதன் பின்பே தீர்வு எட்டப்படாத நிலையில் வழக்கு பதிவு செய்யப்படும்.

ஆனால் இவ்வழக்கில் கொடுங்காயம் என்று சங்கதிகள் சமர்பிக்கப்பட்ட நிலையில் 12.12.2006 ஆம் தேதி தாக்கி காயப்படுத்தியதாக சமர்பிக்கப்பட்டதை பொறுத்து, முதல் தகவலானது 15.01.2007 ஆம் தேதியன்று, அதாவது சுமார் 33 நாள்கள் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளதை பொறுத்து, மேற்படி காலதாமதத்தை நியாயப்படுத்தும் விதமாக அரசுத் தரப்பில் எந்தவித சாட்சிய சான்றாவணங்களும், முழுமையாக சமர்பிக்காத நிலையில், மேற்படி காலதாமதம் அரசுத் தரப்பு வழக்கின் அடிப்படையை பாதிக்கும் என்றும், அதன் அடிப்படையில் மேற்படி சங்கதிகள் மீதான சந்தேகம் எழுவதற்கு மேற்படி சூழ்நிலை பிரதான காரணியாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.30 18:46:50 +0530

<u>புகார்மனுவை பொறுத்து</u> .....

அதன் அடிப்படையில் அரசுத்தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளில் **அ.சா.1 பத்மா** தனது சாட்சியத்தில் கூறியுள்ள **புகார்மனு** குறித்த சங்கதிகளை பொறுத்து குறியீடு செய்யப்பட்ட **அ.சா.ஆ1**ஆன புகார்மனு அதனை தொடர்ந்து வழக்கின் புலன் விசாரணை அதிகாரியால் **அ.சா.ஆ.3ஆக** பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையும் **இந்திய சாட்சியச்சட்டம் 1872 பிரிவு 7,8ன் கீழ் தொடர்புடைய சங்கதிகள் என்றும்** அதில் உள்ள வாசகங்கள் குறித்த சங்கதிகள் **இந்திய சாட்சியச்சட்டம் 1872 பிரிவு 17ன் கீழ் தொடர்புடையவை என்று** இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

அரசுத்தரப்பில் கூறியுள்ள சங்கதிகளில் வழக்கின் அடிப்படையை தீர்மானிக்கக்கூடிய **புகார்மனு** பொறுத்த சங்கதிகளில் **அ.சா.1பத்மா** தனது சாட்சியத்தில்.....

> "..... பின்னர் காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்தேன். அந்த புகார்மனு அ.சா.ஆ.1....."

என்று சாட்சியமளித்தில் **அ.சா.1ஆன பத்மா** கொடுத்த **அ.சா.ஆ.1** ஆன புகார்மனு அடிப்படையாக வைத்து **கு.வி.மு.ச 1973 பிரிவு 154(1)**ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை தொடர்புடைய சங்கதிகள் என்றும் மேற்படி இரு ஆவணங்களும் அதன் சங்கதிகள் குறித்து அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதை **பொறுத்து** .....

<u>குற்றச்சாட்டுகள் பொறுத்து சாட்சியங்களை பரிசீலனை செய்கையில்</u> .....

கொடுமை என்பது உடல் ரீதியாகவோ அல்லது மன ரீதியாகவோ அந்த பெண் விரும்பியதை செய்ய விடாமல் தடுத்தலும், செய்ய விரும்பாததை செய்ய சொல்வதும், மேற்படி பெண்ணை காயப்படுத்துவதும், காயபடுத்த வைப்பதும், அந்த பெண்ணை தற்கொலை எண்ணத்தை தூண்டுவதற்கான செயல்களை செய்வதும், அந்த பெண்ணையோ அல்லது அவரது உறவினர்களையோ மிரட்டியோ அல்லது அச்சுறுத்தியோ சட்ட முரணான ஒரு வேண்டுதலை வைத்து அதில் பலன் அடைதல் என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. அதன் அடிப்படையில்.....

வன்முறையை பொறுத்து அங்கு பிரதானமாக பணம் அல்லது பொருள் பிரதான பங்காக விளங்கும் என்றும், அதனை தொட்டே மற்ற கொடுமைகள் அரங்கேறும்

SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.30 18:46:56 +0530

என்பதும், எந்தவொரு பெண்ணும் இந்திய வாழ்வியல் சூழ்நிலையில் சகிப்பு தன்மையுடன் கூடுமானவரை பொறுமையிலேயே இருப்பார் என்றும், அந்த சகிப்பு தன்மையானது, அதன் எல்லையை மீறும் போது, அதற்கான விளைவுகளை சட்ட ரீதியாக சந்திக்க நேரிடுகிறது என்றும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

குடும்ப வன்முறையை பொறுத்து யார் யார் என்னென்ன குறிப்பிட்ட அத்துமீறல்கள் செய்தார்கள் என்று தனித்துவமாக குறிப்பிடப்பட வேண்டும். பொதுவாக அனைவரையும் கொடுமை செய்தார்கள் என்று பொதுவான சாட்சியம் அளிப்பது ஏற்புடையதாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

குடும்ப வன்முறையை பொறுத்து நான்கு சுவற்றிற்குள் நடக்கும் சம்பவம் கணவன் மனைவிக்கு மட்டுமே தெரியும் என்ற நிலையில் அதற்கு வெளி சாட்சிகள் யாரும் இருக்க மாட்டார்கள் என்பதும், அதன் அடிப்படையில் **அ.சா.1 பத்மா** தனது சாட்சியத்தில் தானும், தனது கணவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டதாகவும், அதன் பலனாக தங்களுக்கு இரு குழந்தைகள் உள்ளனர் என்றும், 5 வருடங்கள் நிம்மதியாக வாழ்ந்ததாகவும், 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான தனது கணவர் டிம்போ வாங்க வேண்டும் என்று சொல்லி ரூபாய் 50,000/–ம் பணமாக தனது பெற்றோரிடம் வாங்கி வர வேண்டும் என்று சொன்னதாகவும், அவ்வாறு பணம் வாங்கி கொடுக்கவில்லை என்றால் அடித்து கொன்றுவிடுவதாக மிரட்டியதாகவும், தன்னை அடிக்கடி கொடுமை செய்ததாகவும், பணம் கொடுக்க முடியாததால் 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கம்பால் அடித்ததில் அ.சா.1 பத்மாவின் வலது கை எலும்பு முறிந்தது என்றும், மற்ற குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தன்னை கொன்றுவிட்டு குழந்தைகளை அனாதை ஆசிரமத்தில் சேர்த்துவிடும்படி மிரட்டியதாகவும், பின்பு அ.சா.1 பத்மா அவரது பெற்றோர் வீட்டில் இருந்த போது 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரும், 4ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரும் சேர்ந்து அவரது வீட்டில் வந்து மிரட்டியதாகவும் காயம் ஏற்பட்டதால் குளச்சல் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனை சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி சாட்சியத்தில் அரசுத் தரப்பு வழக்கானது 12.12.2006 ஆம் தேதி மதியம் 02.00 மணிக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் 50,000/– வரதட்சணை கேட்டு கொடுமைபடுத்தி 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கம்பால் அ.சா.1 பத்மாவின் வலது

SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.30 18:47:04 +0530

கையில் அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியதாகவும், 4ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் அ.சா.1 பத்மாவின் வீட்டின் முன்பக்கம் நின்று கொண்டு கொன்றுவிடுவதாக கொலைமிரட்டல் விடுத்தாக சமர்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் அ.சா.1 பத்மாவின் சாட்சியங்களில் புதிய சங்கதிகள் பலவற்றை நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் போது சமர்பித்துள்ளார். அவற்றில் மேற்படி தரப்பினர்களுக்கு இடையே காதல் திருமணம் நடந்து என்றும், மேற்படி திருமணத்திற்கு அ.சா.1 பத்மாவின் வீட்டார்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் எந்த பேச்சு வார்த்தையும் கிடையாது என்றும், குழந்தை பிறந்ததற்கும், மற்ற எந்த விசேஷ நிகழ்விற்கும் அ.சா.1 பத்மாவின் வீட்டிலிருந்து யாரும் வரவில்லை என்றும், மேற்படி அ.சா.1 பத்மாவின் குழந்தைகளுக்கான பேருகால செலவுகள் அனைத்தையும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் செய்தார்கள் என்றும், திருமணத்தின் போது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் தனக்கு 13 பவுன் தாலி செயினும், ஒரு காப்பும் போட்டதாகவும், மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் வீட்டை பொறுத்தவரை யாரையும் எதிர்பார்த்து இருக்க வேண்டிய சூழ்நிலையில் அவர்களது பொருளாதாரம் இல்லை என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

இவ்வழக்கில் குடும்ப வன்முறையை பொறுத்து அ.சா.1 பத்மா தனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் தன்னை கணவர் டெம்போ வாங்க வேண்டும் என்று ரூபாய் 50,000/–ம் கேட்டு கொடுமைபடுத்தியதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மேற்படி டெம்போ வாங்க வேண்டும் என்று கூறிய சங்கதியானது சாட்சியத்தின் போது மட்டுமே சமர்பிக்கப்பட்டுள்ளது என்றும், அரசுத் தரப்பு வழக்கானது டெம்போ வாங்க கேட்டதாக சமர்பிக்கப்படவில்லை என்பதும், மேற்படி தொகையை வரதட்சணையாக வாங்கி வா என்று சொல்லப்படவில்லை என்றும், சமர்பிக்கப்பட்டுள்ளது.

காதல் திருமணம் செய்த நிலையில் தரப்பினர்களுக்கு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் 13 பவுன் நகை மற்றும் ஒரு காப்பு அணிவிக்கப்பட்ட நிலையில், அ.சா.1 பத்மாவின் வீட்டிலிருந்து எந்தவித ஆதரவும் இல்லாத நிலையில், குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் போதிய வசதி இருக்கும் என்ற நிலையில், மேற்படி நகைகளை கேட்காமல், பணத்தை மட்டும் வாங்கி வா என்று, கொடுமைபடுத்தியதாக கொல்வது

SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.30 18:47:10 +0530

நம்பும்படியாக இல்லை என்றும், மேற்படி 13 பவுன் மற்றும் காப்பின் விலையை விட ரூபாய் 50,000/–ம் பெரிதல்ல என்பதும் மேற்படி நகைகளின் அப்போதைய சந்தை மிதிப்பு சுமார் ரூபாய் 1,00,000/–ம் வரை இருக்கும் நிலையில், மேற்படி நகைகளை திரும்ப ஒப்படைத்ததாகவோ, பெற்றுக் கொண்டதாகவோ, எந்த சாட்சியமும் அரசுத் தரப்பில் சமர்பிக்காதது மேற்படி வரதட்சணை மற்றும் குடும்ப வன்முறை குறித்த சங்கதிகளை சந்தேகத்திற்குள்ளாக்குவதற்கு பிரதான காரணியாக இருக்கிறது என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

மேற்படி அ.சா.1 பத்மாவின் சகோதரரான அ.சா.3 ஜெயசேகர் தனது சாட்சியத்தில் 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் பெற்றோர்கள் அரசு வேலையில் இருந்தார்கள் என்றும், அவர்களுக்கு போதிய சொத்துக்கள் இருந்தது என்றும், மேற்படி குடும்பத்தாருக்கு அடுத்தவர்களை எதிர்பார்க்காமல் குடும்பம் நடத்தக்கூடிய வசதிகளும், வருமானமும் உண்டு என்றும், திருமணத்திற்கு பிறகு தனது தங்கை அ.சா.1க்கு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் தாலி செயின் வளையல் உள்ளிட்ட நகைகள் செய்து கொடுத்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி சாட்சியங்கள் அடிப்படையில் மேற்படி வரதட்சணை மற்றும் குடும்ப வன்முறைகள் சம்மந்தமான சங்கதிகள் அரசுத் தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மூலம் நீதிமன்றம் நம்பும் வகையில் சமர்பிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

மேற்படி, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் என்னென்ன அத்துமீறல்கள் செய்தார்கள் என்று குறிப்பிடாமல் பொதுவாக வரதட்சணை கேட்டு மிரட்டியதாகவும், அடித்தாகவும் சாட்சியம் அளித்துள்ளது ஏற்புடையதாக இல்லை என்றும், நம்பும்படியாக இல்லை என்றும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

காயத்தை பொறுத்த பரிசீலனை .....

இதச 1860 பிரிவுகள் 325–ஐ பொறுத்து

இவ்வழக்கில் **அ.சா.1 பத்மா காயமடைந்துள்ளாரா?** அதற்காக சிகிச்சை எதுவும் எடுத்துக்கொண்டாரா? என்பதை பரிசீலிக்கையில் **அ.சா.ஆ.2 ஆக அ.சா.6**ன் மூலம் குறியீடு செய்யப்பட்ட கருத்துரையுடைன் கூடிய விபத்து பதிவேடு **இந்திய சாட்சியச்சட்டம் 1872 பிரிவு 45ன் கீழ்** தொடர்புடையவை என்றும் அதில் உள்ள

SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.30 18:47:33 +0530

சங்கதிகள் மேற்படி சட்டத்தின் **பிரிவு 17ன் கீழ்** தொடர்புடையவை என்றும் மேற்படி **அ.சா.1 பத்மா** காயமடைந்துள்ளார் என்பதும் அதற்காக சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்பதும் அரசுத்தரப்பில் ஆவணங்களின் அடிப்படையிலும், **அ.சா.6 மருத்துவர் வசந்தகுமாரியின்** சாட்சிகளின் அடிப்படையிலும் **நிரூபணம் செய்துள்ளதாக** இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

மேற்படி **அ.சா.1 பத்மாவுக்கு மேற்படி காயத்தை இந்த வழக்கின் 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் ஏற்படுத்தினாரா**? என்பதை பரிசீலிக்கையில் .....

காயம்பட்ட நபரான அ.சா.1 பத்மா தனது சாட்சியத்தில் .....

> .... 1ம் எதிரி கம்பால் வலது கையில் அடித்ததில் வலது கையில் எலும்பு முறிந்தது. இடது தொடை முதுகு மற்றும் உடம்பில் மாறி மாறி அடித்தார்.....

என்று சாட்சியம் அளித்துள்ளார்.

மருத்துவர் அ.சா.6 வசந்தகுமாரி தனது சாட்சியத்தில் 15.01.2007 ஆம் வருடம் தான் குளச்சல் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது இரவு 11.50 மணிக்கு அ.சா.1 பத்மா சிகிச்சைக்கு தன்னிடம் முன்னிலையானதாகவும், அப்போது தன்னை தனது கணவர் அவருடைய வீட்டில் வைத்து கம்பால் தாக்கியதாக கூறியதாகவும், தான் பரிசீலித்த போது அ.சா.1 பத்மாவின் வலது கை மூட்டின் பக்கம் 4 மரக்கட்டை துண்டுகள் வைத்து கட்டப்பட்டு, கழுத்துடன் சேர்த்து தொங்கு கயிற்றுடன் காணப்பட்டது என்றும், தான் பரிசோதித்த போது வெளிபுற காயங்கள் இல்லாததால் மேல் சிகிச்சைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கு அவருக்கு நுண்கதிர் படம் எடுக்கப்பட்டு, அதில் அவருக்கு எலும்பு முறிவு இருந்ததால் அந்த அறிக்கையின்படி தான் அவருக்கு கொடுங்காயம் என்று சான்று வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி மருத்துவ ஆவணம் ஆன அ.சா.ஆ.2 கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேட்டை பரிசீலிக்கையில், மேற்படி அ.சா.1 பத்மா 15.01.2007 ஆம் தேதி இரவு 11.50 மணிக்கு அவரது சகோதரர் அ.சா.3 ஜெயசேகரால் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டுள்ளார் என்பதும், மேற்படி விபத்து பதிவேட்டில் அ.சா.1 பத்மாவை அவரது கணவர் 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான சுதீர் 12.12.2006 அன்று அவரது வீட்டில் வைத்து கம்பால்

SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.30 18:47:40 +0530

தாக்கியதாக சமர்பிக்கப்பட்டுள்ளது. நேரத்தைகுறித்து எத்தனை மணிக்கு தாக்கப்பட்டார் என்ற சங்கதி அதில் குறிப்பிடப்படவில்லை.

12.12.2006 ஆம் தேதி தன்னை தாக்கியதாக சொன்னதை பொறுத்து அன்றையதினமே காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக அ.சா.1 பத்மா தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். ஆனால் அன்றையதினம் அவ்வாறான எந்த தகவலும் நிலையத்தில் பெறப்படவில்லை என்று அ.சா.7 புலன்விசாரணை அதிகாரி சாட்சியம் அளித்துள்ளார். தங்கள் நிலையத்தில் 15.01.2007 ஆம் தேதி தான் தகவல் கிடைத்து என்றும், அதற்கு முன்பு எந்த தகவலும் கிடைக்கவில்லை என்று சாட்சியம் சமர்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி காயத்தை பொறுத்து மேற்படி காயம் எங்கு வைத்து, எத்தனை மணிக்கு ஏற்படுத்தப்பட்டது என்ற சங்கதி அரசுத் தரப்பில் சமர்பிக்கப்படவில்லை என்பதும், காயம்பட்ட எந்தவொரு நபரும் காயமடைந்தவுடன் மருத்துவமனைக்கு உடனடியாக சிகிச்சைக்கு சேர்ந்து அதுகுறித்த தகவலை சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிப்பது வழக்கம் என்பதும், அதுபோல் காவல் நிலையத்திற்கு காயம்பட்ட நபர் சென்றவுடன் அவருக்கு மருத்துவ நமுனா கொடுத்து அனுப்பி வைப்பது வழக்கம் என்பதும், ஆனால் இவ்வழக்கில் அவ்வாறான இரு சூழ்நிலைகள் காணப்படவில்லை என்பதும், காயமடைந்த பிறகு சுமார் 33 நாள்கள் காலதாமதமும், அதனை தொடர்ந்த மருத்துவ ஆவணமும் சமர்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தரப்பினர்கள் தங்களுக்கு இடையே இருந்த கருத்து வேறுபாட்டினை மிக நேர்த்தியாக கையாண்டு, காவல் துறையினரின் உதவியுடன் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள் என்று வெளிப்படையாக தெரிய வருகிறது.

காயத்தை பொறுத்து மேற்படி அ.சா.1 பத்மா நாட்டு மருந்து சிகிச்சை எடுத்துக் கொண்டதாக சாட்சியம் அளித்ததை பொறுத்து எங்கு எடுத்தார் யாரிடம் எடுத்தார் என்ற சங்கதிகள் புலன்விசாரணை தரப்பில் ஏன் விசாரிக்கப்படவில்லை என்பது, மேற்படி புலன்விசாரணை அதிகாரி மனசாய்வுடன் புலன்விசாரணையை செய்துள்ளாரோ என்ற சந்தேகத்தினை எழுப்புவதற்கு கூடுதல் காரணியாக இருக்கிறது.

காயத்தை பொறுத்து அதன் முதல் தகவல் கொடுப்பதில் ஏற்பட்ட தாமதம், மேற்படி காயத்தின் சங்கதிகள் மீது இந்நீதிமன்றத்திற்கு முழுமையான நம்பிக்கை

SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.30 18:47:56 +0530

ஏற்படாததற்கு கூடுதல் காரணியாகஇருக்கிறது என்றும், அதன் அடிப்படையில் மேற்படி காயம் குறித்த சங்கதிகளை அரசுத் தரப்பில் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் முன்னிறுத்தி நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

இ.த.ச 1860 பிரிவு 506 பத்தி இரண்டை பொறுத்து

1 மற்றும் 4வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தன்னை குற்றமுறு அச்சுறுத்தல் செய்து அதனால் உடனடியான உயிர் அச்சம் ஏற்பட்டது என்ற சங்கதி அரசுத் தரப்பில் சமர்பிக்கப்படவில்லை என்றும், அ.சா.3 ஜெயசேகர் தனது சாட்சியத்தில் 12.12.2006 ஆம் தேதி 4ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தன்னுடைய வீட்டில் வந்து மிரட்டவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளதை பொறுத்தும், மேற்படி சட்ட பிரிவை பொறுத்து அரசுத் தரப்பில் **நிரூபணம் செய்யவில்லை** என்று, நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

மற்ற சாட்சிகள் குறித்த பரிசீலனை .....

அரசுத் தரப்பில் சாட்சியாக முன்னிறுத்தப்பட்ட அ.சா.2 ரெத்தினசாமி, அ.சா.3 ஜெயசேகர் ஆகிய இருவரும், வழக்கு சம்பவம் தனக்கு நேரடியாக தெரியாது என்றும், அ.சா.1 பத்மா சொல்லி தான் தெரியும் என்றும், அ.சா.4 சதாரன் தனது சாட்சியத்தில் அரசுத் தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.5 வின்சென்ட் பார்வை மகஜர் சாட்சி அரசத் தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

மேற்படி புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியம் வழக்கு சம்பவத்திற்கு பின்பான விசாரணை என்பதால் மேற்படி புலன்விசாரணை அதிகாரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு விவரங்கள் கூட தெரியாமல் எவ்வாறு விசாரணை செய்தார் என்ற சந்தேகமானது மேற்படி புலன்விசாரணை அதிகாரி முறையாக புலன்விசாரணை செய்யவில்லை என்பதை வெளிப்படையாக காட்டுவதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

இந்திய சாட்சியச்சட்டம் 1872 **பிரிவு 134ன்படி** ஒரு வழக்கினை தீர்மானிப்பதற்கு சாட்சிகளின் எண்ணிக்கை முக்கியமல்ல என்றும் சாட்சியின் நம்பகத்தன்மை மட்டுமே முக்கியம் என்றும் தெளிவாக கூறப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. அதனடிப்படையில் இந்த வழக்கில் அரசுத்தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அரசுத்தரப்பை மேற்சொன்ன பரிசீலனையில் கருத்தில் கொண்ட சங்கதிகளை **உறுதிப்படுத்தவில்லை** என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.30 18:48:02 +0530

<u>இந்நீதிமன்றம் கருத்தில் கொண்ட சாட்சியங்களின் சாராம்சத்தின் தீர்வு :</u>

இந்த வழக்கில் **அ.சா.1 பத்மாவை 1ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபர் கொடுமை செய்தார் என்பதும், 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் அ.சா.1ஐ தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தினார் என்பதும், 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கூடுதல் வரதட்சணை கேட்டார் என்றும், 4ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கொலைமிரட்டல் விடுத்து மரணபயம் ஏற்படுத்தினார் என்பதும், அரசுத் தரப்பில் சந்தேகதிற்கிடமின்றி தகுந்த சாட்சிகள் மூலம் **நிரூபணம் செய்யப்படவில்லை** என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

இந்நீதிமன்றம் மேற்சொன்ன கருத்தில் கொண்ட விஷயங்களை வைத்தும் சாட்சியம் சான்றாவண சான்று கூறுகளின் அடிப்படையிலும், இந்நீதிமன்றம் அரசுத்தரப்பில் தனது தரப்பை இந்த வழக்கில் **1ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீதான **இ.த.ச** 1860 பிரிவு **498A, 325 பிரிவு 4 வரதட்சணை தடுப்பு சட்டம் 1961ன்** கீழான குற்றச்சாட்டுகளையும், **4ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீதான **இ.த.ச** 1860 பிரிவு **506 பத்தி ஒன்றின்** கீழான குற்றச்சாட்டையும் சந்தேகத்திற்கிடமின்றி தகுந்த சாட்சிகள் வாயிலாக மெய்ப்பிக்கவில்லை என்றும் **இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 3 மற்றும் பிரிவு 101ன்** படியும் **தீர்வு காண்கிறது.**

<u>8.தீர்வு:-</u>

முடிவாக, 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான **சுதர் த/பெ. தங்கநாடார்** மீதான **இந்திய தண்டனை சட்டம்** 1860 பிரிவுகள் **498A, 325 மற்றும் பிரிவு 4 வரதட்சணை தடுப்பு சட்டம் 1961ன் கீழான** குற்றச்சாட்டுகளும், **4ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **சுபின் த/பெ. தங்கநாடார்** மீதான **இந்திய தண்டனை சட்டம்** 1860 பிரிவு **506 பத்தி ஒன்றின் கீழான** குற்றச்சாட்டும், அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி **நிரூபணம் செய்யப்பட்டவில்லை** என்பதால், மேற்படி நபர்கள் **குற்றவாளிகள் இல்லை** என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான **சுதர் த/பெ. தங்கநாடார், 4ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **சுபின் த/பெ. தங்கநாடார்** ஆகியோர்களை வழக்கின் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்தும், குற்றவியல் **விசாரணை முறைச்சட்டம் 1973 பிரிவு 248(1)ன்** படி வழக்கிலிருந்தும் விடுதலை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.30 18:48:13 +0530

9. கு.வி.முச 1973 பிரிவு 452ன் கீழ் உத்தரவு:-

வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை எனவே கு.வி.முச. 1973 பிரிவு 452ன் கீழ் உத்தரவு இல்லை.

10 கு.வி.முச 1973பிரிவு 357, 357–A ன் கீழ் உத்தரவு:-

வழக்கின் தன்மை சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு கு.வி.முச 1973பிரிவு 357, 357–A ன் கீழ் உத்தரவுகள் எதுவும் இல்லை.

11. கு.வி.மு.ச 1973 பிரிவு 437–A– ன் கீழ் பிணையப்பத்திரம் :-

வழக்கில் கு.வி.மு.ச 1973 பிரிவு **437–A–** ன் கீழ் பிணையப்பத்திரம் பெறப்பட்டுள்ளது. மேற்படி பிணையப்பத்திரமானது அப்பிணையப்பத்திரம் பெறப்பட்ட தேதியில் இருந்து 6 மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும். பின்னர் அப்பிணையப்பத்திரம் காலாவதியாகி விடும் .

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று **(30.03.2026)** திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.30 18:48:19 +0530

நீதித்துறை நடுவர்
இரணியல்.

பின் இணைப்பு

அரசுத்தரப்பு சாட்சிகள்

அ. சா.1	பத்மா	நிகழ்நிலை புகார்தாரர்
அ. சா.2	ரெத்தினசாமி	கேள்விநிலை சாட்சி
அ. சா.3	ஜெயசேகர்	கேள்விநிலை சாட்சி
அ. சா.4	சதாரன்	கேள்விநிலை சாட்சி
அ. சா.5	வின்சென்ட்	பார்வை மகஜர் சாட்சி
அ.சா.6	வசந்தகுமாரி	மருத்துவ சாட்சி
அ.சா.7	கிளமன்சியாள்	காவல் அதிகாரி
அ.சா.8	தனலெட்சுமி	கூடுதல் சாட்சி

அரசுத்தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்

அ.சா.ஆ.1	15.01.2007	புகார்மனு
அ.சா.ஆ.2	15.01.2007	காயச்சான்றிதழ்
அ.சா.ஆ.3	05.05.2011	முதல் தகவல் அறிக்கை
அ.சா.ஆ.4	26.01.2007	மாதிரி வரைபடம்
அ.சா.ஆ.5	26.01.2007	பார்வை மகஜர்

அரசுத்தரப்பு சான்று பொருட்கள் : *இல்லை*

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் சாட்சி சான்றாவணம் : இல்லை

SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.03.30 18:48:30 +0530

நீதித்துறை நடுவர்
இரணியல்

Judicial Magistrate Court.
Eraniel

Court Seal

" The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date''.